# ICAR- மத்திய உள்நாட்டு மீன்வள ஆராய்ச்சி நிறுவனம்

## பராக்பூர், கொல்கத்தா -700120

### COVID 19 தொற்று சூழலில் நீர்த்தேக்கம் மற்றும் சதுப்புநிலங்களை சார்ந்த மீனவர்களுக்கான

***மற்றும் மீனவர் கூட்டுறவு சங்ககளுக்கான ஆலோசனைகள்***

*மீனவர்கள் எந்தவொரு மீன் பிடிப்பு தொடர்பான செயல்களில் ஈடுபடும்போதும் சிறிய குழுக்களாக மட்டுமே வேலை செய்ய வேண்டும் மற்றும் பாதுகாப்பு முககவசம் அணிதல், அடிக்கடி கைகளை கிருமிநாசினி அல்லது சோப்பு கொண்டு கழுவி சுத்தப்படுத்துதல் மற்றும் சமூக இடைவெளியை கடைப்பிடிக்கவேண்டும். பிடிக்கப்பட்ட மீன்களைக் கையாளும் மற்றும் பேக்கிங் செய்யும் போது கையுறைகளைப் பயன்படுத்துவது பரிந்துரைக்கப்படுகிறது. ஆரோக்கியமான நபர்களை மட்டுமே மீன்களை கையாள்வதில் ஈடுபடுத்துங்கள்.*




*சிறிய குளங்கள் மற்றும் பருவகால தொட்டிகளில் மீன்களை அறுவடை செய்யும் நேரத்தில் குறைந்தபட்ச மீனவர்களை மட்டுமே ஈடுபடுத்தவேண்டும்.*

*பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய மீனவர்கள் வீசுவலை, இருப்புவலை(gill net) மற்றும் பொறிகளை தனியாக அரசு கட்டுபாடுகளுக்கு உட்பட்டு இயக்கலாம்.*

*மீனவர்கள், வற்றாத பெரிய நீர்த்தேக்கங்களில் கூட்டமாக மீன்பிடிப்பதை தவிர்க்கவேண்டும். குறைவான எண்ணிக்கையில் அதாவது ஒன்று அல்லது இரண்டு மீனவர்கள் பரிசல் அல்லது நாட்டுப் படகில் மீன்ப்பிடிக்கலாம்*



கூண்டுகளில் மீன்வளர்ப்பவர்கள் மீன்களுக்கு உணவளித்தல் மற்றும் கண்காணித்தல் போன்ற வழக்கமான நடவடிக்கைகளுக்கு ஒன்று அல்லது இரண்டு ஆரோக்கியமான நபர்களை நியமிக்கலாம். கூண்டுகளில் உள்ள மீன்கள் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக வளர்ச்சி குறைவு மற்றும் இறப்பை தவிர்ப்பதற்கு உணவளிக்கும் நேரங்கள் சரியாக பின்பற்றப்படவேண்டும். வலைகள், உணவளிக்கும் தட்டுக்கள் வாளிகள் மற்றும் இதர உபகரணங்களை கிருமிநாசினி கொண்டு குறிப்பிட்ட நேர இடைவெளிகளில் சுத்தப்படுத்த வேண்டும்.




குளங்கள் மற்றும் சதுப்புநிலங்களில் மீன்களுக்குகான உணவை *50%* குறைத்து, நீர்நிலைகளின் ஆக்ஸிஜன் அளவை பரிசோதித்து, தேவையான மேலாண்மை முறைகளை மீனவர்களின் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பின்பற்றுவதால் அதிக அளவு மீன்கள் இருப்பு இருப்பது பராமரிக்கபடும்

மீன்குஞ்சு பொறிப்பகங்களில், மீன்களின் இனப்பெருக்கம் மற்றும் குஞ்சு வளர்ப்பு முறைகளை கையாளும்போது பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றி, சமூக இடைவெளியை கடைப்பிடிப்பது போன்ற நடைமுறைகளை பின்பற்றலாம். நாற்றங்கால் மற்றும் வளர்ப்பு குளம் தயாரிப்பு பணிகளின் போது சுய பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும். மீனவர்களின் பாதுகாப்பு நடவடிக்கையான முககவசம், சோப்புகள் மற்றும் கிரிமிநாசினிகள் மாநில துறைகள் / தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலம் கிடைப்பதை மீனவர் கூட்டுறவு சங்கங்கள் உறுதி செய்ய வேண்டும்.




மீனவர்களின் பாதுகாப்பு நடவடிக்கையான முககவசம், சோப்புகள் மற்றும் கிரிமிநாசினிகள் மாநில துறைகள் / தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலம் கிடைப்பதை மீனவர் கூட்டுறவு சங்கங்கள் உறுதி செய்ய வேண்டும்.

மீன்களை பிடித்து வரும் கூடங்களில் மக்கள் கூட்டம் அதிகம் வராமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் மீன்கள் அந்தந்த கிராமங்களிலோ அல்லது மாவட்டங்களிலோ விற்பனை செய்ய ஊக்குவிக்கப்படலாம். மீன்களை அறுவடை செய்ய சிறிய குழுக்களாக செயல்பட்டு சந்தைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளில் மூன்று அல்லது நான்கு நபர்களிடம் ஒப்படைக்கப்படலாம். பனிக்கட்டிகிடைப்பது மற்றும் மீன்களை முறையாக விற்பனை செய்வதற்கான குறைந்தபட்ச தேவைகள் மாநில மீன்வளத்துறை அதிகாரிகளால் உறுதி செய்யப்பட வேண்டும்

வலைகள் / பொறிகள் / படகுகள் போன்றவை ஒவ்வொரு செயல்பாட்டிற்கு பின்னர் சுத்தம் செய்யப்பட வேண்டும் மற்றும் நோய் தொற்று அபாயத்தைக் குறைக்க ஆரோக்கியமான நபர்கள் அவரவர்களுக்கான படகை மட்டுமே இயக்க வேண்டும்.




மீன் உணவுகள், ஊட்டச்சத்துக்கள், கீமோதெரபியூடிக்ஸ்களான ஆக்ஸிஜன் டேப்லெட், ஜியோலைட் போன்றவை வாங்குவதற்கும், மீன் விற்பனை செய்வதற்கும் மாநில அரசாங்கத்தின் அறிவிப்புகள் மற்றும் வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.


*மேலும் விபரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*

**இயக்குனர்**, *ICAR-CIFRI, பராக்பூர் -700120.*